1993 அக்டோபர் 27]

வசதி திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டையில் உக்கடை கிராமம், பொன்னன் சாயன் கோட்டையில் 8 ஏக்கர் நிலப்பரப்பு கையகப் படுத்தப்பட்டு, இதில் குறைந்த வருவாய் பிரிவினருக்காக 113 வீடுகளையும், நடுத்தர வருவாய் பிரிவினருக்காக 264 வீடு களையும் சுமார் 574.77 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் தேசிய வீட்டுவசதி வங்கியின் ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப் படும். எனவே, புதியதாக அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

31—

பூலாங்குளம் கிராம துவக்கப்பள்ளியில் சத்துணவு உண்ண கூடுதல் மாணவர்களுக்கு அனுமதி.

*20148—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பூலாங்குளம் கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு உண்ண கூடுதல் மாணவர்களுக்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக மகிழ்ச்சி. அதேசமயத்தில் பல்வேறு பள்ளிக் கூடங்களில் மாணவர்களுடைய ஸ்ட்ரெங்த் அதிகரிக்கும்போது இந்தச்சத்து உணவானது கூடுதல் மாணவர்களுக்கு கொடுக்கப்படாததனால் பல்வேறு பள்ளிக்கூடங்களில் அதைப் பிரித்து அதாவது 100 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் 60 மாணவர் களுக்குத்தான் சத்துணவு கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கின்றபோது ஸ்ட்ரெங்த் அதிகரிக்கும்போது அதையே பிரித்துக் கொடுக்கின்றார்கள். இதனால் மாணவர்களுக்குப்

பிரச்சினை – அங்கே சத்துணவு கொடுக்க முடியாத பிரச்சினை–அந்த நிர்வாகிகளுக்கு ஏற்படுகிறது. அதனால் தமிழகம் முழுவதும் இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனமாக இதைப் பார்த்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆளும்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள் நியாயமான கோரிக்கையை விடுத்தால் அதை உடனடியாக நிறைவேற்றுகின்ற முதலமைச்சர் தமிழக முதல்வர் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி). அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் தன்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்தப் பள்ளிக்கூடத்தில் 260 பிள்ளைகளுக்கு உணவு அளிக்க வேண்டும்; ஆனால் 240 பிள்ளைகளுக்குத்தான் உணவு அளிக்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டவுடன், உடனடியாக 20 பிள்ளைகளுக்கு கூடுதலாக உணவு அளிக்க உடனடியாக புரட்சித்தலைவி அவர்கள் தந்தியிலேயே உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு பேரவைத்தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். எந்த இடத்திலேயும் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படும் போது, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களோ, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களோ, அந்தத் தகவலைத் தெரிவித்தால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் கூடுதலான மாணவர்களுக்கு அந்தப் பகுதிலே உணவினை வழங்குவதற்கு உத்தரவு அளிக்கிறார்கள். ஆகவே, அப்படிக் குறைகள் இருப்பின் சட்டமன்ற உறுப்பினர் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்தாலே போதும். அவர் கூடுதலாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–45

திரு. எஸ். எஸ். ராம சுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்தி மூலமாக அதிகரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ததாகச் சொன்னார்கள். அதற்காக மீண்டும் மகிழ்ச்சியை, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் சத்துணவு கொடுக்கும்போது இன்னும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்ற ஒரு குறை இருக்கிறது. அரிசி, எண்ணெய் எல்லாம் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதை நிவர்த்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 27]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு வந்த பிறகு கூடுதலாகத்தான் எல்லாவற்றையும் ஆக்கி இருக்கிறோமே தவிர எந்தப் பொருளையும் குறைக்கவில்லை. ஒரு கிராம் எண்ணெய் கொடுக்கப்பட்டு வந்ததை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் 2 கிராம் எண்ணெயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை. அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

32—

வேம்பு மரத்தை தமிழ்நாட்டில் அதிகம் வளர்க்க நடவடிக்கை.

* 17325—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக அளவில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த வேம்பு மரத்தை தமிழ்நாட்டில் அதிகம் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பாதக் கமலங்களில் என்னுடைய பணிவான வணக்கங்களை முதலில் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் வரிசையில் உறுப்பினராக இருந்த அமைச்சரவர்கள், இப்போது அமைச்சர் ஆனதால் அந்த வரிசையில் அமர்ந்திருக்கிற நண்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்து மேசையைத்தட்டி ஒலி எழுப்புகிறார்கள்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம், வேம்பை ஒரு சர்வரோக சஞ்சீவியாகவே இந்த அரசு கருதுகிறது. அதை அதிக அளவில் வளர்ப்பதற்கு தமிழ்நாட்டில் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தனித்திட்டம் ஏதும் இல்லை.